# ஐரோப்பிய ஒன்றியம் தேர்தல் கண்காணிப்பு பணி

## இலங்கை ஜனாதிபதி தேர்தல் 2024

### தேர்தல் செயன்முறையின் அனைத்து அம்சங்களையும் கட்டங்களையும் தூதுக்குழு மதிப்பீடு செய்யும்:

- சட்ட கட்டமைப்பு மற்றும் அதன் அமுலாக்கம்
- தேர்தல் நிர்வாகத்தின் செயலாற்றுகை
- அரசு நிறுவனங்களின் பங்கு
- வாக்காளர் பதிவு
- பிரச்சார நடவடிக்கைகள் மற்றும் பிரச்சார நிதி
- அடிப்படைச் சுதந்திரங்கள், சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் ஆகியவற்றுக்கான மரியாதை உட்பட தேர்தல்களின் ஒட்டுமொத்த சூழல்
- பெண்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் பங்கேற்பு
- இணையவழி தகவல் மூலங்கள் மற்றும் சமூக ஊடகங்கள் உட்பட ஊடகங்களின் பங்கு
- சிவில் சமூகத்தின் பங்கு
- வாக்களிப்பு, வாக்குகளை எண்ணுதல் மற்றும் அட்டவணைப்படுத்தல்
- முறைப்பாடுகள் மற்றும் மேன்முறையீட்டு செயன்முறை
- முடிவுகளை அறிவித்தல்

### ஆணை

ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்பு தூதுக்குழுவின் பணிப்பாணை யாதெனில் இலங்கையின் தேசிய சட்டமைப்பு மற்றும் சனநாயக ரீதியிலான தேர்தல்கள் தொடர்பாக இலங்கை ஏற்றுள்ள சர்வதேச மற்றும் பிராந்திய தரநியமங்களின்படி 2024ம் ஆண்டு நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலை கண்காணிப்பதாகும்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்பு நடைமுறைகளுக்கு அமைவாக கண்காணிப்பாளர்கள் தேர்தல் செயற்பாட்டில் தலையிடமாட்டார்கள். அனைத்து ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்பாளர்களும் தமது நடுநிலை மற்றும் பாரபட்சமற்ற தன்மைக்கு உத்தரவாதம் அளிக்கும் வகையில் நடத்தை நெறிமுறைகளையும் நெறிமுறை சார்ந்த வழிகாட்டுதல்களையும் கண்டிப்பான முறையில் பின்பற்றுவதற்கான கடப்பாட்டினைக் கொண்டுள்ளனர்.

2005 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையினால் அங்கீகரிக்கப்பட்டு உலகளாவிய ரீதியில் தேர்தல் கண்காணிப்பில் ஈடுபடுகின்ற 50 க்கும் மேற்பட்ட சர்வதேச அமைப்புகளால் கைச்சாத்திட்டுள்ள "சர்வதேச தேர்தல் கண்காணிப்புக்கான கோட்பாடுகள் பற்றிய பிரகடனம்" (Declaration of Principles for International Election Observation) என்பதற்கு அமைவாக ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்பு குழு செயற்படுகின்றது.

தேர்தல் கண்காணிப்புக் தூதுக்குழுவின் கண்டுபிடிப்புகள் இலங்கை மற்றும் மாலைத்தீவின் ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுக்குழு, ஐரோப்பிய ஒன்றியத்தின் உறுப்பு நாடுகள் மற்றும்; நிறுவனங்கள் ஆகியவற்றிலிருந்து சுயாதீனமாக உள்ளது.

### குறிக்கோள்கள்

இலங்கை தேர்தல்கள் ஆணைக்குழுவின் அழைப்பின் பேரில், ஐரோப்பிய ஒன்றியம் செப்டம்பர் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலைக் கண்காணிப்பதற்காக இலங்கையில் ஒரு தூதுக்குழுவை பங்கேற்கச் செய்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்பு பணியின் (EU EOM) முக்கிய நோக்கங்கள்:

- இலங்கையின் ஜனநாயக செயல்முறைக்கு ஆதரவு அளிப்பது
- தேர்தல் செயல்முறையில் மக்களின் நம்பிக்கையை மேம்படுத்துதல்
- மனித உரிமைகள் மற்றும் சட்ட ஆட்சியின் மதிப்பை வலுப்படுத்துதல்



### தலைமை கண்காணிப்பாளர்

ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்பு தூதுக்குழு ஸ்பெயின் நாட்டின் ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினர் நாச்சோ சான்செஸ் அமோர் அவர்களின் தலைமையில் செயற்படும்.

### கண்காணிப்பாளர்கள்

10 தேர்தல் நிபுணர்களைக் கொண்ட பிரதான தூதுக்குழு ஆகஸ்ட் 14ம் திகதி கொழும்பை வந்தடைந்தது. 26 நீண்டகால கண்காணிப்பாளர்கள் தேர்தல் செயன்முறையை கண்காணிப்பதற்காக ஆகஸ்ட் 29ம் திகதி முதல் நாடளாவிய ரீதியில் பணியமர்த்தப்பட்டுள்ளார்கள். அதனையடுத்து, தேர்தலன்று 32 குறுங்கால கண்காணிப்பாளர்கள் வாக்களிப்பு பணிகளை தொடங்குதல், வாக்களித்தல், வாக்குகளை எண்ணுதல் மற்றும் முடிவுகளை அட்டவணைப்படுத்தல் ஆகியவற்றை கண்காணிப்பார்கள். மேலும் ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்பு குழு தேர்தல் செயன்முறை நிறைவடையும் வரை இலங்கையில் தங்கியிருப்பார்கள்.

### EOM அறிக்கைகள்

தேர்தல்களைக் கண்காணிப்பதற்காக ஐரோப்பிய ஒன்றியத்தினால் நிறுவப்பட்டுள்ள நடைமுறைகளுக்கு அமைவாக செயலாற்றி ஒட்டுமொத்த தேர்தல் செயன்முறை சார்ந்த முழுமையான மற்றும் பாரபட்சமற்ற பகுப்பாய்வை மேற்படி தூதுக்குழு முன்வைக்கும்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்பு நடைமுறைகளுக்கு அமைவாக தூதுக்குழு ஒரு பூர்வாங்க அறிக்கையை வெளியிடுவதுடன் தேர்தல் நிறைவடைந்து இரண்டு நாட்களுக்குப் பின்னர் கொழும்பில் ஒரு செய்தியாளர் மாநாட்டையும் நடாத்தும்.

ஒட்டுமொத்த தேர்தல் செயன்முறை நிறைவடைந்த பின்னர், எதிர்கால தேர்தல் செயல்முறைகளுக்கான பரிந்துரைகளின் தொகுப்பை உள்ளடக்கிய இறுதியறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு சம்பந்தப்பட்டவர்களுடன் பகிர்ந்து கொள்ளப்படும்.

---

இலங்கையில் தேர்தல் செயன்முறைகளுடன் இணைந்து செயலாற்றுவதில் ஐரோப்பிய ஒன்றியம் ஒரு நீண்ட வரலாற்றைக் கொண்டுள்ளது. இறுதியாக 2019ல் கண்காணிப்பு பணிகளை செய்ததோடு இதற்கு முன்னர் ஆறு தடவை இலங்கை வந்துள்ளது. இது சனநாயக செயன்முறைகள் மற்றும் கூட்டாண்மை சார்ந்த விடயங்களில் ஐரோப்பிய ஒன்றியம் இந்த நாட்டுடன் கொண்டுள்ள உறுதிப்பாட்டை பிரதிபலிக்கிறது.

**மேலும் விவரங்களுக்கு**

**Website: http://srilanka2024.eueom.eu/**
**(X) Twitter: @eueomsrilanka24**
**Facebook: @eueomsrilanka2024**

**ஸ்கேன்**